# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 2186/13 - 2020 ජූලි මස 28 වැනි අඟහරුවාදා - 2020.07.28**

2186/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: எம்ஈ/ஏசீக்யூ/எப்/819
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:
4/3/8/2014 PC/373

கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான கிருளப்பனை, காவிந்த இடத்தை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக, கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லையுள் அமைந்துள்ள மாநகர தொகுதி இலக்க கிழக்கு பாமன்கடையில் அமைந்துள்ள, சர்வேயர் ஜெனரலினால் 2020.02.28 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் கொ. 9820 கொண்ட அடிப்படை வரைபு இலக்கம் 1 மற்றும் 2 என குறிப்பிடப்பட்டுள்ள 0.0379 ஹெக்டயார் கொண்ட பின்வரும் விபரங்கள் கொண்ட 02 காணித்துண்டுகள்.

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹைலெவல் வீதி, வரிப்பண இலக்கம் 200 (ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: சீ. ஏ. த. அல்விஸ் செனவிரத்ன; விஸ்தீரணம்: 0.0202 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**

காணியின் பெயர்: வரிப்பண இலக்கம் 5 (ஒரு பகுதி) காவிந்த இடம்; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: யூ. எம். சில்வா; விஸ்தீரணம்: 0.0177 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அவர்களது உரிமை தொடர்பான அனைத்து உறுதிகள் மற்றும் பிற ஆவணங்களை பரிசீலனை யின் போது முன்வைத்தல் வேண்டும்.

சட்டத்தரணி ரோஷணி திசாநாயக்க,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை
மற்றும் கொழும்பு மாநகரசபை அதிகார
எல்லைப் பிரதேசத்துள் காணிகள்
எடுத்தல் அதிகாரி.

மாநகர ஆணையாளர் அலுவலகம்,
கொழும்பு 07, நகர சபை,
2020, யூலை 22.

08 - 192

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.